**வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனி - 2023**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனியின் ('கம்பனி') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று, விரிவான வருமானக் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023திசெமபர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துகம்பனி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பில் நிட்சயமற்ற பொருண்மை

எனது அபிப்பிராயத்தை முனைப்பழியாக்காமல்,நிதிக்கூற்றுக்களின் 2.1 ஆம் குறிப்பு தொடர்பாக நான் கவனத்தை ஈர்க்கின்றேன்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாயவாணடிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 0.16 மில்லியன் தொகையான பிடித்துவைத்தல் வரி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், இந்த நிதி வருமானம் மற்றும் வியாபார மற்றும் ஏனைய ஏனைய பெறவேண்டியவை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் காலக் கிரமத்தல் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். கின்றோம். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2. கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகளின்மை

| விடயம் | தொகை (ரூபா) | கிடைக்கப் பெறாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 5.2 மில்லியன் | நிலையான சொத்து மெய்மையாய்வு அறிக்கை | சகல பூச்சிய பெறுமதியில் சொத்துத்களும் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் வஸ்கடவ களஞ்சியத்திற்கு களஞ்சியப்படுத்தலிற்காக அனுப்பபட்டிருந்தது. | பௌதீக உள்ள தன்மையை உறுதிப்படுத்துவதற்கு வருடாந்த கணிப்பீட்டுச் சபை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் ரூபா 9.47 மில்லியனாக இருந்தது. அதில் ரூபா 9.41 மில்லியன் 5 ஆண்டுகளிற்கு மேலாக நீண்ட காலம் நிலுவையாகவிருதது. கம்பனியானது கடன்பட்டோரை அறவிடுவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இருந்த போதிலும், மேற்குறித்த ஐந்து ஆண்டுகளிற்கு மேலான மீதிகளிற்காக ரூபா 9.35 மில்லியன் கடன்கழவு செய்யப்பட்டிரந்தது. . | கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுவதுடன் காலக் கிரமத்தல் உடனடியாக நடவடிக்கை எடுக்க்பபடும். கின்றோம். | பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| நட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| மன்ற உறுப்புரையின் 52 ஆம் பிரிவு | ஐந்தொகை திகதியின் பின்னர் ஆறு மாதங்கள் அல்லது அதற்கு குறையாமல் ஒவ்வொரு கலண்டர் அண்டிலும் கம்பனிால் பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், அண்மைய ஆண்டுகளில் கம்பனி வருடாந்த பொதுக் கூட்டத்தை கூட்டியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் உடன்படுகின்றோம். 2024 ஆண்டிலிருந்து அதிகார நடைமுறை பிரகாரம் ஒழுங்காக வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. | மன்ற உறுப்புரையின் 52 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட நடவடிக்கை ஏக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2.01 மில்லியன் தொகையான நட்டமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 7.47 மில்லியன் தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 9.49 மில்லியன் தொகையான வீழ்ச்சியை அவதானிக்கப்பட்டது. நடைமுறையாண்டில் ஏனைய வருமானம் எதுவும் இருக்கவில்லை, நிர்வாகச் செலவினம் அதிகரிப்பு, நிதி வருமான வழ்ச்சி மற்றும் பொருட் கிரயம் என்பவற்றினால் என்பன இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்தன.

**2.2 .விகிதப் பகுப்பாய்வு**

அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் நடைமுறை விகிதம் 1.25 முதல் 1.20 வரை அதிகரித்திருந்தது

ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் மொத்த இலாபம்/ (நட்டம்) விகிதம் 14.53% இலிருந்து (70 %) இற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் தேறிய இலாபம்/ (நட்டம்) விகிதம் 26.3 % இலிருந்து (32.6 %) இற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மின்சார கம்பங்கள் உற்பத்தி செய்வதே வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனியின் பிரதான வியாபாரமென்றாக இருந்தது. 2013 இலிருந்து கம்பனியானது தரப்பரிசோதனையில் தவறியமையால் மின் கம்பங்களின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. அதன்பின்னர் கம்பனியானது மீளாய்வாண்டு இறுதிவரை கம்பங்களின் தரத்தை முன்னேற்றுவதன் மூலம் மின்கம்பங்களின் உற்பத்தியை மீள தொடங்கவோ அல்லது ஏதாவது வேறு பொருத்தமான வியாபாரங்களை இனங் காணப்பட்டோ இருக்கவில்லை. மேலும் கம்பனியானது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20.5 மில்லியன் திரண்ட நட்டங்களை அடைந்திருந்தது. | சொல்லப்பட்ட மின்சாரக் கம்பங்கள் நிர்மாச் செயற்திட்டம் தொடர்புபட்ட பிரதான (ரூபா 25,000,000.00) மூலதன நிலையில் உள்ளது. எனவேதொடர்புபட்ட தரண்ட நட்டமும் பதியப்பட்டது. மேலும், முன்னரே நடவடிக்கைகள் அமுலாக்கப்பட வேண்டும். | தரத்தை முன்னேற்றுவதன் மூலம் கம்பங்களின் உற்பத்தியை மீள தொடங்குவதற்கு அல்லது வேறு பொருத்தமான வியாபாரத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும். |

### 3.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்படுத்தாமை அல்லது குறைபயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 5.2 மில்லியனாக இருந்ததுடன் அந்த சகல சொத்துக்களும் 2013 இலிருந்து பயனற்றிருந்தது. | சகல பூச்சிய பெறுமதியில் சொத்துக்களும் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் வஸ்கடவ களஞ்சியத்திற்கு களஞ்சியப்படுத்தலிற்காக அனுப்பபட்டிருந்தது. | தாபனத்தின் வளங்கள் ஆகக் கூடிய நலன்களை பெறுவதற்கு பயன்படுத்த வேண்டும். |

## 4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக உபாயத் திட்டம், செயல்நடவடிக்தை திட்டம் மற்றும் கொள்வனவு திட்டம் என்பன கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காலக் கிரமத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுமட. | உபாயத் திட்டம், செயல்நடவடிக்தை திட்டம் மற்றும் கொள்வனவு திட்டம் என்பன கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |